**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 10 |
| Name | : | திரு. வசந்தகுமார் |
| Father Name | : | திரு. மாசிலாமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம், தனிப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15-11-2020 ம் தேதி நான் புளியம்பட்டி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 9.00 மணிக்கு கோவை சரவணம்பட்டி சிவானந்தபுரத்தை சேர்ந்த ரங்கநாயக்கர் மகன் செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப் பெற்று நி.கு.எண். 739/2020 ச.பி. 174 Cr.P.C-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும்

இணைத்து கனம் நீதித்துறை நடுவர் சத்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன்விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு சமர்ப்பித்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை சத்தியமங்கலம் நீதிமன்றத்திற்கு 04.12.2020 ல் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கு.வி.மு.ச. பிரிவு 174-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் வருவாய் வட்டாட்சியருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலை அனுப்பவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் காலம் 3 சி-யில் குறிப்பிடப்படவேண்டிய விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் என் அண்ணன் விவசாயம் செய்து வந்தார் , சிறுவயதிலிருந்தே குடிப்பழக்கம் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன தேதி, நேரத்தில் புகார் பெறப்படவில்லை என்றும், அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**